Registered as a News paper in Ceylon விலை சதம் 10




ராஜ பீடி கம்பெனி; கொழும்பு-14


# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [1-9-67] இதழ் 202
யாழ்ப்பாணம் பிலவங்க ஆவ. 16 ஜ. அவ். 25 வெள்ளிக்கிழமை





ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# உற்பத்தியான வெங்காயம் ஏற்றுமதிசெய்ய வழியில்லை

## வடபகுதி விவசாயிகள் எதிர் நோக்கும் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட வெங்காயத்துக்கு இம்மாத இறுதியில் விதிக்கப்பட்ட தடையினால் இப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான அந்தர் வெங்காயம் பழுதடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாளாந்தம் 35 பெட்டி வெங்காயம் கொழும்புக்கு இங்கிருந்து அனுப்பப்பட்டு வந்தது. ஆனால் இம்மாதம் 19-ந் திகதியிலிருந்து வெங்காய ஏற்றுமதியை ரத்துச் செய்யுமாறு அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்தே இந்த நிலைமை இங்கு உருவாகியுள்ளது.

அரசாங்கத்தின் உப உணவு உற்பத்தித் திட்டத்தில் வடபகுதி விவசாயிகள் அதிக அக்கறை காட்டி வந்தபோதிலும் இந்த திடீர் கஷ்டங்கள் இப்பகுதி விவசாயிகளுக்கு பெரும் பிரச்னையை உண்டுபண்ணியுள்ளதோடு வெங்காய உற்பத்தியில் அதிருப்தியையும் உண்டுபண்ணியுள்ளதாகப் பலர் புகார் செய்துள்ளனர்.

கடந்த மாதங்களில் இங்கிருந்து தலா 115 அந்தர் வெங்காயம் கொண்ட 35 பெட்டிகள் புகையிரதம் மூலம் தினசரி கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்தது. இதனை வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாஜத்தினரே செய்து வந்தனர். ஆனால் இந்தத் திடீர் உத்தரவைத் தொடர்ந்து இப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட வெங்காயங்கள் பாதுகாக்கத் தகுந்த இடமில்லாததால் அவைகள் அழுகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் விவசாயிகளிடமிருந்து விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் சங்கங்கள் தங்கள் கடனை விவசாயிகளிடம் அறவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, விவசாயிகளும் கூட தங்கள் கடனைச் செலுத்த முடியாத ஒரு நிலைமை உருவாகியுள்ளது.

இப்பகுதி மக்கள் அர

[6-ம் பக்கம் பார்க்க]

கல்முனைத்தொகுதி இடைத்தேர்தல்:

## மஷூர் மௌலானாவை தமிழரசுக்கட்சி நிறுத்தும்

சங்கானை, வியாழன்

கல்முனைத் தொகுதி இடைத் தேர்தலுக்கு தேசிய அரசாங்கத்தின் சார்பில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் எம். இசட். எம். மசூர் மௌலானா போட்டியிடுவாரென நிச்சயமாகத் தெரியவருகிறது.

கல்முனை இடைத் தேர்தலுக்கு அபேட்சகரைத் தெரிவு செய்ய நியமிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி உப குழு செனட்டர் மௌலானாவையே சிபார்சு செய்திருக்கிறது. தேசிய அரசாங்கத்தில் உள்ள ஏனைய முஸ்லிம் அமைச்சர்களும் பார்லிமெண்ட் உறுப்பினர்களும் செனட்டர் மௌலானாவின் நியமனத்தை அங்கிகரிப்பதாகத் தெரிவித்தமையே தமிழரசுக் கட்சியின் முடிவுக்குக் காரணமென அறியப்படுகிறது.

## "ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் கலைவிழா எடுக்கவேண்டும்"

### சேனையூர் கலைவிழாவில் மந்திரி திருச்செல்வம்

மூதூர், வியாழன்

"தமிழ் மக்களின் கலை, கலாச்சாரம் மிகத் தொன்மையானது. இயல், இசை, நாடகத்தில் தமிழ் மக்களுக்குள்ள தீவிர பற்றுதல் தான் அத்தன்மையில் எழுதப்பட்ட நமது காப்பியங்களை இன்றும் நாம் நினைத்துக் கௌரவிக்க வைக்கிறது. தமிழர்களுக்கு மொழியுணர்வும், கலாச்சார உணர்வும் இரு கண்கள் போன்றவை." என சேனையூரில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் கலைவிழா நிகழ்ச்சிகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"இறைவன்மீது நாம் பற்றுதல கொள்ள தமிழ் இசையைப்போல் பிறிதொன்றைக் காண்பது அரிது. தமிழின் இசை மெய்மறக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது. இங்கு நடைபெறுகின்ற இந்தக் கலைவிழா இப்பகுதியில் உள்ள கிராம சபைகளால் நடாத்தப்படுவதையிட்டு அதற்குப் பொறுப்பான மந்திரியென்ற முறையில் மகிழ்ச்சியடைகிறேன். கலையார்வத்தை மேம்படுத்தவும், அவற்றை விஸ்தரிக்கவும் இவ்வித கலைவிழாக்களை நாட்டில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் எடுப்பது நல்லது. இத்தகைய நடவடிக்கைகளைக் கிராமசபை மேற்கொண்டால் கலாச்சார வளர்ச்சியில் கிராமப்புற மக்களும் முன்னணியில் திகழ்பவர்களாய் இருப்பார்கள். ஆனாலும் இன்று உண்மையான கலையார்வத்தையும், கலாச்சார முறைகளையும் நாம் கிராமப்புறங்களிலேதான் காணமுடிகிறது. இத்தகைய ஒரு கூட்டுமுயற்சியை மேற்கொண்ட சகல உள்ளூராட்சி மன்றங்களையும் நான் பாராட்டுகிறேன்."

சரசாலை கொலைவழக்கு

## நேரில் கண்ட ச[illegible]பவத்தை சாட்சி நடித்துக்காட்டினார்

### இன்று முழுநாளும் விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

சரசாலை கொலை வழக்கில் எதிரியின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், சாட்சியமளித்த 22 வயதான கந்தசாமி தருமலிங்கத்தை நேற்று சுமார் 3 மணிநேரம் குறுக்கு விசாரணை செய்தார். இன்று காலையும் தொடர்ந்து தருமலிங்கம் குறுக்கு விசாரணை செய்யப்படுவார். இன்று மாலையும் தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

சாட்சியமளித்த தருமலிங்கம் தான் நேரில் கண்ட சம்பவங்களை நேற்று நண்பகல் நீதிமன்றத்தில், சுமார் 20 நிமிடங்கள் நடித்துக் காட்டினார். அப்பொழுது நீதியரசர், ஜூரிசபையினர், வழக்கறிஞர்கள் அவதானித்தனர்.

திரு. ஜி ஜி. பொன்னம்பலம் சாட்சியைகுறுக்கு விசாரணை செய்தார்.

வழ; எதிரி கையில் வெட்டியதைத் தெளிவாகக் கண்டீர்? — ஆம்

நீதி: முருகேசு சயிக்கிளில் வந்ததைக் கண்டீர் - ஆம்.

நீதி; அவர் எதிரில் வந்து கொண்டிருந்தார்? - ஆம்

நீதி: உம்மை கடந்துசென்றூரா? - இல்லை

நீதி: கலப்பை கொடுத்து தடுத்தது முன்னாலா, பின்னாலா? - முன்னால்

நீதி: கைவெட்டு உமக்கு முன்னால் நடந்தது? - ஆம்

வழ: நன்றி பிரபு. சாட்சியிடமிருந்து ஒரு மறுமொழி எடுக்க 15 நிமிடம் செலவாகிறது. (சாட்சியிடம்) எதிரி ஓங்கி வெட்டியதைக் கண்டீர்? ஆம்

வழ: கீழ் கோர்ட்டில், எதிரி எப்படி கையை வெட்டினார் என்பதை கூறமுடியவில்லை என்றீரா? - ஞாபகமில்லை

நீதி: செத்தவருக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## "ராதா சுட்டதாக வாசு முதலில் சொல்லவில்லை"

### ஹெட் [illegible]ன்ஸ்டபிள் சாட்சியம்

சென்னை, ஆக. 31

திரைப்படத் தயாரிப்பாளர் வாசுவின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்து முடித்த பின்னர்தான். 'எம். ஜி. ஆரை ராதா சுட்டுவிட்டுத் தம்மையும் சுட்டுக் கொண்டார்.' என்று வாசு கூறினார்" என்று எம். ஜி. ஆர்- ராதா வழக்கில் சென்னை செஷன்ஸ் நீதிபதிமுன் நேற்றுச் சாட்சியமளித்த சாயப்பேட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஹெட்கான்ஸ்டபிள் ராமமூர்த்தி தெரிவித்தார்.

வாக்குமூலம் சதிவுசெய்யப்பட்டு முடிந்த பின்னரே சுடப்பட்டது பற்றி வாசு கூறியதால் தாம் அதைப் பதிவு செய்யவில்லையென்றும் கான்ஸ்டபிள் சொன்னார்.

அது முக்கியமான வாக்குமூலம் என்பது தனக்குத் தெரிந்திருந்தபோதிலும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு முடிந்துவிட்டதால் அதைத்தாம் பதியவில்லையென்று சாட்சி கூறினார்.

வாக்குமூலம் பதிவு செய்யப்படுகையிலேயே ரிவால்வரைத் தாம் திறந்து பார்த்ததாகவும் அதில் பாவிக்கப்படாத மூன்று தோட்டாக்களும் பாவிக்கப்பட்ட மூன்று தோட்டாக்களும் இருக்கக் கண்டதாகவும் சாட்சி கான்ஸ்டபிள் சொன்னார்.

## காட்டிற்குள் இறந்தநிலையில் இளைஞனின் சடலம்

### மர்மமரணம் பற்றி பொலிஸ் சந்தேகம்

வவனியா, வியாழன்

ஓமந்தையிலிருந்து பத்து மைல்களுக்ப்பாலுள்ள புதுக்குளம் ரோட்டிலுள்ள காட்டிற்குள் 35 வயதுமதிக்கத்தக்க இளைஞர் ஒருவருடைய சடலமொன்றைப் பொலிசார் கண்டு பிடித்துள்ளனர்.

இனந் தெரியாத இந்நபர் மரமொன்றில் சாரமொன்றினால்கழுத்தில் சுருக்கிடப்பட்ட நிலையில்காணப்பட்டதாகவும், பத்து நாட்களுக்குள் இவர் இறந்திருக்கலாமெனவும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

வவனியா மாஜிஸ்திரேட் ஸ்தலத்தில் விசாரணை நடாத்தினார், பிரேத பரிசோதனை நடாத்திய வவனியா டி. எம். ஓ. டாக்டர் கே. நாகரத்தினம் இறந்தவரின் மரணம் [illegible] கிடமானதா[illegible] அனுராதபுரம் ஜே எம். ஓ. இது சம்பந்தமாக பூரண விசாரணை செய்ய வேண்டுமென அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று மேலும் விசாரணை நடைபெறவிருக்கிறது.

இறந்தவரை எவரும் அடையாளம் கண்டு பிடிக்காததால் பொலிசார் இவ் விபரங்களை பொதுமக்களுக்கு [illegible] அதிகாரிகள் மூலமாகவும் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நம் இளைஞர்களுக்காக நாம் எப்போதுமே வருங்காலத்தை உருவாக்க முடியாது. ஆனல் நமது இளைஞர்களை வருங்காலத்துக்கு ஏற்றவர்களாக உருவாக்க முடியும்.

— ரூஸ்வெல்ட்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்களு ஆவணி மீ 16 ௳ (1-9 67)


## பாராட்டினுல் போதாது

பிரதமரின் பாராட்டுக்களையும் அமைச்சர்களின் புகழ்ந்துரைகளையும் பெற்றுக் கொண்ட வடபகுதி விவசாயிகள் பலர் இன்று "தலையில் கை வைத்து அழ வேண்டிய" நிலையில் இருக்கின்றனர். ஏன் இந்தத் துர்ப்பாக்கியநிலை, யார் இதற்குக் காரணம்?

உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றும் இதற்கு நாட்டு மக்கள் தமக்கு பூரண ஒத்துழைப்பும் உதவியும் அளிக்க வேண்டுமென்றும் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார். வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற உப உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதால் பெருந் தொகையான பணம் இங்கிருந்து வெளிநாடு போகிறதென்றும் உபஉணவுப் பொருள்களின் உற்பத்தியை இங்கு அதிகரித்தால் வெளிநாடு செல்லும் பணத்தை மிச்சப்படுத்தலாமென்றும் பிரதமர் முதல் அரசாங்க அதிகாரிகள்வரை அனைவரும் ஆலோசனை கூறினர். பிரதமரின் வேண்டுகோளுக்கும் அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கும் யார் செவி சாய்த்தாலும் சாய்க்காவிட்டாலும் வடபகுதி விவசாயிகள் உடன் செவிசாய்த்து உபஉணவுப் பொருள்களின் உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட்டனர். நாட்டுக்குத் தேவையான வெங்காயத்தில் எழுபத்தைந்து சதவிகிதத்தை வடபகுதி விவசாயிகள் உற்பத்தி செய்துள்ளனர் என்றும் நாட்டின் முழுத் தேவையையும் அவர்கள் விரைவில் பூர்த்திசெய்து விடுவார்களென்றும் பிரதமரும் மற்றையோரும் பாராட்டினர்.

வெங்காய உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயிகளுக்கு பணஉதவி அளித்து விளைபொருள் சங்கங்கள் ஊக்கமளித்தன. உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்ய வழமையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. சென்ற வருடம் இதேகாலத்தில் ஐம்பது ரெயில் பெட்டிகளில் ஏற்றி அனுப்பப்பட்ட வெங்காயம் இம்முறை 35 பெட்டிகளில் அனுப்பப்பட்டன. இதுவும் குறைந்து திடீரென்று வெங்காயம் ஏற்றுவதை நிறுத்தும்படி ஓர் உத்தரவு இங்கு கிடைத்ததாம். நிலைமையை எடுத்துச் சொன்னபின் மீண்டும் ஏற்றுமதி செய்ய அனுமதி கிடைத்தது. ஆனல் இருபது பெட்டிகளில்தான் தினசரி அனுப்பும்படி கூறப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்த வெங்காயத்தை இங்கு சேமித்து வைக்க முடியாது. அதற்கு வசதியும் இல்லை. நாட்பட்டால் வெங்காயம் பழுதடைந்து அழுகிவிடும்.

இதேசமயம் சென்றவாரம் பெல்லாரி வெங்காயம் இறக்குமதியாகியிருக்கிறதாம். உள்ளூரில் வெங்காயம் இருக்கும்போது எதற்காக இறக்குமதி செய்ய வேண்டும்? உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை விற்பனை செய்ய முடியாவிட்டால் உபஉணவுப் பொருள் உற்பத்தியில் விவசாயிகள் எப்படி ஈடுபடுவார்கள்.

பாராட்டும் புகழ்ந்துரையும் போதாது விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனைக்கும் விநியோகத்துக்கும் தகுந்த வழிவகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இது வெறும் வெங்காய விஷயமல்ல. உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கமே இதில் தங்கியிருக்கிறது. உணவு அமைச்சரும் பிரதமரும் இதுவிஷயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

## பஜனைப் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், வியாழன் சப்ததீவக திவ்யஜீவன சங்கத்தினரால் நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் ஆலயத்திலிருந்து 2-9-67ல் ஒரு பஜனை ஊர்வலம் நடைபெற திவ்யஜீவன சங்கத்தினர் ஒழுங்குகளை செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

செப்டம்பர் 1-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நயினை அம்மனை ஆலயத்திலும், தொடர்ந்து வீரபத்திரர் ஆலயம், ஸ்ரீ முருகன் ஆலயம் ஆகிய ஆலயங்களில் விசேஷ அபிஷேக ஆராதனையும், பிரார்த்தனைகளும், சமய சொற்பொழிவுகளும நடைபெறும்.

அதையடுத்து மறுநாள் 2-9-67 சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு நயினுதீவு வீரசக்தி விநாயகர் ஆலயத்திலிருந்து பஜனைப் பாதை யாத்திரை ஆரம்பமாகி ஸ்ரீ நாகபூஷணி ஆலயத்தை வந்தடையும். பின்னர் நயினுதீவிலிருந்து பஜனைப் பாதையாத்திரைப் புறப்பட்டு புங்குடுதீவு, பெருங்காட்டுக் கந்தசுவாமி கோவில், சிவன்கோவில் ஆகிய ஆலயங்கட்குச் சென்று, நண்பகல் 12 மணிக்கு கண்ணகை அம்மன் ஆலயத்தை வந்தடையும். அங்கு நடைபெறும் விசேஷ அபிஷேக ஆராதனைகளில் கலந்துகொண்டு மாலை 3-30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு, மடத்துவெளி, வேலணை, மண்கும்பான் ஆகிய இடங்களுக்கூடாக 3-ந் திகதி அதிகாலை நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை வந்தடையும்.

## "இங்கு அவர்கள் வசிக்க முடியாது"

காங்கேசன் துறை, வியா. குருநகர் மீனவர்களைக் காங்கேசன்துறைப் பகுதியில் வசிக்க அனுமதிப்பதில்லையென மீண்டும் வற்புறுத்தி, காங்கேசன்துறைப் பட்டினசபை அரசாங்க அதிபருக்கு மீண்டும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. காங்கேசன்துறைப் பட்டினசபையின் விசேஷ கூட்டமொன்றில் இத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. முன்னரும் அரசாங்க அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'சுகாதாரம் எல்லோர்க்கும் பொதுவானது

## வவனியாவில் சுகாதார மந்திரி

வவனியா, வியாழன் சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன இன்று காலை வவனியா புகையிரத நிலையத்தில் வந்திறங்கியபொழுது வவனியா பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம் வவனியா நகரசபைத் தலைவர் திரு. எம். பொன்னையா ஆகியோர் உட்பட பலர் மந்திரிக்கு மலர் மாலை சூட்டி வரவேற்றனர்.

இதையடுத்து நடைபெற்ற நேரிய குளம் வைத்தியசாலை திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொண்டு மந்திரி திரு. ஜெயவர்த்தன உரையாற்றுகையில் சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் பட்டினத்திலுள்ள மக்களுக்கும் கிராமப்புற மக்களுக்கும் ஒரு பாகுபாடோ அன்றேல் வித்தியாசமோ கிடையாதெனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'சுகாதாரம் நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. நாட்டின் அபிவிருத்திக்கும் மக்களின் ஒத்துழைப்பிற்கும் சுகாதாரம் அத்தியாவசியமானது. கிராமப்புற மக்களின் குறைகளை நேரில் அறிவதற்காகவே நான் இப்பிரயாணத்தை மேற்கொண்டுள்ளேன். உங்கள் குறைகளை நான் நிவிர்த்தி செய்யவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.'

## இன்றைய பலன்

1-9-67 வெள்ளிக்கிழமை (ஆவணி மீ 16 ௳)
நட்சத்திரம்- புனர்பூசம் பகல் 12-15 வரை மேல் பூசம்.
திதி-துவாதசிஇரவு10-09 வரை மேல் திரயோதசி.
சுபநேரம்- 6-04 7-34
ராகுகாலம்-10-34-12-04

மேடம்- உத்தியோக விருத்தி, ஊக்கமிகுதி.
ரிஷிபம்- சகோதர ஒற்றுமை, சஞ்சலநிவர்த்தி.
மிதுனம்- தாமதம் ஏற்படல், மறதிக்குணம்.
கடகம்- கடின சிந்தை, சமவிருத்தி.
சிம்மம- பேச்சுவன்மை, பெரியார் உறவு,
கன்னி- அன்னியர் நாட்டம், அலைச்சலைக்கொடுக்கும்
துலாம்- இல்லறச்சிறப்பு, இறைபக்தி.
விருச்சிகம்-மக்கள் நலன், மனமகிழ்ச்சி.
தனுசு-பகையுண்டு. அபயமிலலை.
மகரம்-காதலர் சத்திப்பு, உரையாடல் இன்பம்.
கும்பம்- வேண்டாதநட்பு வீண்பெயர் கேட்டல்.
மீனம்- பெற்ருர் நலன், பெருமையுமுண்டு.

—சோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

சரசாலை கொலைவழக்கு விசாரணை

# "சம்பவம் நடந்த போது எதிரி என்ன செய்தார்"?

— வழக்கறிஞர்

## "அவர் "மேடர்" செய்தார்"

— சாட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி "சம்பவம் நடந்த தினத்தன்று மாலை 4-30 மணிக்கு வாழை இலை வாங்குவதற்காக நான் மரணமானவரின் வீட்டுக்குப்போனேன். அங்கு அவரது மனைவியும் பிள்ளைகளும் இருந்தனர். அங்கிருந்து திரும்பிவரும்போது எதிரியை ஒழுங்கையில் கண்டேன். அவர் கலப்பை, நுகம், கத்தி ஆகியவற்றைக் கொண்டுவந்தார். மரணமானவர் சைக்கிளில் வந்தார். அப்போது எதிரி மரணமானவரைக் கலப்பையை கொடுத்துத் தடுத்தார். அப்போது மரணமானவர் நிலத்தில் விழுந்தார். அவர் எழும்ப எத்தனிக்கும்போது அவரின் கையில் கத்தியால் எதிரி வெட்டினுர். பின்னர் மரணமானவரின் காலைப் பிடித்து இழுத்துச்சென்று கழுத்தில் வெட்டினுர். வெட்டுவிழுந்ததை நான் பார்த்தேன."

மேற்கண்டவாறு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் நடைபெறற சரசாலைக்கொலை வழக்கில் சாட்சியமளித்த கந்தசாமி தருமலிங்கம் தெரிவித்தார்.

இவ்வழக்கில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 19-ம் திகதி சரசாலையைச்சேர்ந்த கந்தையா சிவகுரு அல்லது செல்லத்துரை என்பவரைக் கொலைசெய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை பேரம்பலம் என்பவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் வழக்கறிஞர் [illegible] வழக்கறிஞர் எஸ். கே. விநாயகம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகியிருந்தார். அரசாங்கத்தால் எதிரிக்காக வழக்கறிஞர் கே. குணரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் வழகறிஞர் இரத்தினேசர் ஆஜராகியிருந்தார்.

சம்பவம் நடந்த தினங்களில் எதிரி என்ன தொழில் செய்தார்எனமுடிக்குரியவழக்கறிஞர்சாட்சியைக்கேட்டபோது, எதிரி "மேடர்" செய்தார் என சாட்சி சொன்னபோது கோர்ட்டில் பலத்த சிரிப்பொலி கிளம்பியது. நீதியரசர் மீண்டும் சாட்சியைப்பார்த்து எதிரி என்ன தொழில் செய்தார் என்று கேட்டபோது எதிரி கமம் செய்துவந்ததாக சாட்சி தெரிவித்தார்.

எதிரிதரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி தெரிவித்ததாவது:-

வழ: பொலிசில் கைவெட்டப்பட்டதைச்சொன்னீரா?

சாட்: இல்லை. கழுத்து வெட்டினதைச் சொன்னேன்.

வழ: கழுத்து வெட்டினதைப்பற்றிக் கேட்கவில்லை. கைவெட்டினதைப் பற்றிப் பதில் சொல்லும்.

சாட்: மௌனம்,

வழ:கேட்டகேள்வி விளங்கவில்லையா?

சாட்: விளங்கவில்லை.

வழ: அப்ப ஏன் மறுமொழிசொன்னீர்?

சாட்: மௌனம்.

வழ: மறுநாள் பொலிஸுக்குக் கைவெட்டைப்பற்றிக்குறிப்பிட்டீரா?

[6-ம் பக்கம் பார்க்க]

## நாட்டிலும் நகரிலும்

ஒரு காலத்தில் இலங்கையில் கோப்பிச் செடி செழிப்பாக வளர்ந்ததென்பது பலருக்கு தெரியாமலிருக்கலாம்.

ஆங்கிலேயர் மலைநாடுகளை வெட்டிக் கொளுத்தி காடுகளைத் துப்புரவாக்கி பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் கோப்பியை வளர்த்தார்கள். அப்பொழுது, இப்பொழுதும் போல கோப்பிக்கு நல்ல கிராக்கி.

கோப்பி கொஞ்சக்காலம் இலங்கையை ஆண்ட ஆங்கிலேயருக்கு நல்ல வருமானம் தேடிக் கொடுத்தது. திடீரென்று கோப்பிச் செடிக்கு ஒரு நோய் வந்துவிட்டது. செடிகள் வாடி வதங்சின கோப்பிப் பழங்கள் முற்றி நல்ல பலன் கொடுக்கவில்லை, விளைச்சல் குறைந்தது. தொடர்ந்து கோப்பியால் கிடைத்த வருமானமும் குறைந்தது.

உலகத்திலேயே அராபியருக்கு இரண்டாவதாக கணிக்கப்படும் சிறந்த வணிகர்களாயிருந்த ஆங்கிலேயர் உடனே கோப்பித் தோட்டங்களை அழித்துவிட்டு அவ்விடங்களில் தேயிலைச் செடியை உற்பத்தி செய்தார்கள்.

கோப்பியை விட தேயிலை தான் சிறந்த பானம் என்று மும்முரமான பிரசாரம் செய்தார்கள், தங்கள் சொந்த நாடாகிய இங்கிலாந்தில் தேயிலையின் திவ்வியமான குணதிசயங்களைப் பரப்பினுர்கள். இதன் விளைவாக ஆங்கிலேயரே உலகில் மிகக்கடுமையான தேநீர் குடிகாரராணுர்கள்.

ஆனல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் இந்தப் பிரசாரம் எடுக்கவில்லை. யாழ்ப்பாணத்தான் காலையில் எழுந்தவுடன் பழஞ்சோற்றுத் தண்ணீர் குடிக்கும் வழக்கத்தை கைவிட்டுவிட்டுஒரு முக்கால் சிரட்டை வெறும் கோப்பியை பனங்கட்டியைக் கடித்துக் கொண்டு குடிக்கப் பழகினுன்.

கோப்பிக் கொட்டையின் விலை ஏறஏற இப்பொழுது யாழ்ப்பாணத்தவரின் கோப்பிக் குடியும் குறைந்து வருகிறது.

இது ஒரு புறம். கடந்த பல ஆண்டுகளாக எமக்கு வருமானம் கொடுத்துவந்த ஒரு முக்கிய பொருளாகிய தேயிலைக்கு இப்பொழுது ஆபத்து வரப்பார்க்கிறது. உலகச்சந்தையில் எமது இலங்கைத் தேயிலையுடன் போட்டிபோட இந்தியா, மலேசியா, சீனு முதலிய நாடுகள் கிளம்பிவிட்டன. முன்போல தேயிலையில் கிடைக்கும் ஆதாயத்தை நாம் நம்பியிருக்கலாகாது. கோப்பிச் செடியை அழித்து தேயிலைச் செடியை வைத்ததுபோல வேறேதாவது வருவாய்தரும் செடியை உண்டாக்கவேண்டும்.

தேயிலை சம்பந்தமாக இப்பொழுது நடந்துவரும் கொமிஷன் முன்னிலையில் கரைப்பகுதி உற்பத்தியாளர் சங்கம் சாட்சியமளித்தபோது தேயிலைக்குப் பதிலாக இன்னெரு ஊதியம் தரும் செடியை உற்பத்தி செய்யும்போது ஆற அமர யோசித்துச் செய்யவேண்டுமென்று எச்சரிக்கை செய்திருக்கிறது.

ரப்பரும் தேயிலையும் தெங்குப் பொருள்களும் வெள்ளைக்காரர் இருக்கும் வரை அவர்களுடைய வணிக தந்திரத்தாலும் அவர்களுடைய கப்பல் ஏற்றுமதி இறக்குமதி வசதிகளாலும் எமக்கு நன்மையைத் தந்தன. இனி வருங்காலத்திலும் இவற்றை நம்பி நாம் வாழலாமா என்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுடன் புதிய போர் தொடுக்க ஐ. அ. கு. தயாராக இருக்கிறது

## ஆனல் அரபுநாடுகள் ஒற்றுமை முதலில் அவசியம் என்கிருர் நாஸர்

### அரபு உச்சி மாநாட்டில் அரசியல் தீர்வும் ஆலோசனை

கார்டும், ஆகஸ்ட் 31

"ஐக்கிய அரபுக் குடியரசு இஸ்ரேலுடன் மேலும் ஒரு சண்டைக்குத் தயாராயிருக்கிறது. ஆனல், அதற்கு முதற்படியாக அரபு நாடுகளிடையே ஒற்றுமை ஏற்படவேண்டியது அவசியமாகும்'' என்று ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாஸர், கார்டுமில் நடைபெறும் அரபு உச்சி மாநாட்டில் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற அரபுநாட்டுத் தலைவர்களின் ஓர் இரகசியக் கூட்டத்திலேயே நாஸர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தாரென்றும், கூட்ட நிகழ்ச்சிகள் பற்றி எவ்வித அதிகாரபூர்வமான அறிக்கையும் வெளியிடப்படவில்லையென்றும் கார்டுமிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மற்றைய அரபு நாடுகளுடனுன பழைய பூசல்களையாவற்றையும் தீர்க்கவும் ஐ. அ. கு. தயாராகவிருப்பதாகவும் நாஸர் விருப்பம் தெரிவித்தார்.

**அரசியல் தீர்வு**

போரின் மூலம் மேற்கு ஆசியப் பிரசனையைத்தீர்க்க முடியவில்லையெனக் கண்டால் அரசியல் தீர்வுமூலம் அதற்கு ஒரு முடிவுகாண முயல வேண்டுமென நாஸர் தெரிவித்தாரெனவும் சொல்லப்படுகிறது.

இந்த அரசியல் தீர்வை அண்மையில் யூகோஸ்லாவியத் அதிபர் டிட்டோ, நாசருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது வெளியிட்ட திட்டத்தின் அடிப்படையிலேயே அமைய வேண்டுமென்ற ஆர்வத்தை மனதிற் கொண்டே, நாஸர் வெளியிட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

**டிட்டோ திட்டம்**

அரபுப் பிராந்தியங்களின் சுயாதிபத்தியம் அங்கீகரிக்கப்படவேண்டும், இஸ்ரேல் துருப்புகள் போருக்கு முன்னிருந்த நிலைகளுக்கு வாபஸ் பெறவேண்டும், அகாபா குடா ஐ.அ.கு. வுக்குச் சொந்தமானதா அல்லது சர்வதேச நீர்நிலையா என்பது பற்றி உலக நீதிமன்றம் ஒரு முடிவு எடுக்கும் வரை அங்கு கப்பல் போக்குவரத்துச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்பன டிட்டோ திட்டத்தின் அம்சங்களாகும்.

ஜோர்தான் மன்னர் ஹுசெயினும் அரசியல் தீர்வை ஆதரித்ததாகத் தெரிகிறது. நாஸரும் மன்னர் ஹுசெயினும் அரபு நாடுகளை எதிர்நோக்கியுள்ள பொருளாபாரக் கஷ்டங்கள் பற்றிப் பேசியதங்கவும் தெரியவருகிறது.

**சிரியா, அல்ஜீரியா கடுமையான போக்கு**

இந்த உச்சி மகாநாட்டில் கலந்துகொள்ளாத சிரியா, அல்ஜீரியாத் தலைவர்கள் இஸ்ரேலுடன் கடுமையான கொள்கையை அரபுநாடுகள் அனுஷ்டிக்க வேண்டுமெனக் கருத்துக் கொண்டுள்ளன.

அல்ஜீரியரவில் நேற்றுப் பேசிய அல்ஜீரிய ஜனதிபதி பூமேடியான், போராட்டம் மூலமே அரவு நாடுகள், இஸ்ரேலிடம் இழந்துள்ள தமது பிராந்தியங்களை மீட்க வேண்டுமெனக் கூறியுள்ளார். சமாதான வழிமுறையை அவர் நிராகரித்தார்.

கார்டுமுக்கு வந்திருந்த சிரியாப் பிரதிநிதியான சிரியா வெளியுறவு மந்திரி, உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. அவர் இன்று சிரியாவுக்குத் திரும்புவதற்குத் தயாராகிக் கொண்டிருப்பதாகவும், ஆனல் ஐ.அ.கு. ஜனதிபதி நாஸர் அவரை மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது.

## அகில இந்திய ரேடியோவில் வர்த்தக ஒலிபரப்பு

### நவம்பர் 1-ந் திகதியிலிருந்து 3 நிலையங்களில் ஆரம்பமாகும்

புதுடில்லி, ஆக. 31.

அகில இந்திய ரேடியோ ஒலிபரப்பில் நவம்பர் 1-ந் தேதி தொடக்கம் வர்த்தக விளம்பரங்கள் இடம் பெறும். முதலில், அகில இந்தியா ரேடியோவின் மூன்று நிலையங்களில் மட்டுமே வர்த்தக ஒலிபரப்பு இடம் பெறும் என இந்திய மத்திய தகவல், ஒலிபரப்பு மந்திரி திரு. கே. கேஷா அறிவித்துள்ளார்.

பம்பாய், பூனு, நாக்பூர் ஆகிய நிலையங்களிலிருந்தே வர்த்தக ஒலிபரப்பு செய்யப்படும். விவித பாரத நிகழ்ச்சிகளில் இதற்காக 75 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**அரசாங்கத்துக்கு நல்ல வருமானம்**

இந்த முன்னேடி திட்டத்தினுல் அரசாங்கத்துக்கு 45 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்குமென திரு. ஷா தெரிவித்துள்ளார். இத்திட்டம் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்ட பின், 2 முதல் 5 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சீன உள்நாட்டுக் கலவரங்களில் 3,000 க்கு மதிகமானேர் கொலை

### மாஸ்கோ ரேடியோ தகவல்

மாஸ்கோ, ஆக. 31

சீனுவில் மாசே துங்குக்கு எதிராக நடைபெற்ற பரவலான கலகங்களில் 3,000க்கு மதிகமானேர் கொல்லப்பட்டதாக மாஸ்கோ ரேடியோச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணமாகிய சிக்கியாங்கில் மட்டும் தொடர்ந்து எட்டு நாட்கள் நடைபெற்ற கலவரங்களில் 3,000 பேர் இறந்துள்ளதாகவும், மற்றைய பகுதிகளில் இறந்தவரின் தொகையையும் சேர்த்தால் 3,000க்கும் அதிகமாகுமென்றும் அச்செய்தி தெரிவித்தது.

சுமார் 4,000 வீடுகளும் தரைமட்ட மாக்கப்பட்டனவென்று கூறிய இவ்வானெலிச் செய்தியில் இக்கலவரங்கள் எப்போது நிகழ்ந்தன என்பது குறிப்பிடப்படவில்லை.

## சீன-பிரிட்டிஷ் உறவுகள் பற்றி பிரிட்டனின் ஆழ்ந்த கவலை

### சீன வெளியுறவு மந்திரிக்கு பிரிட்டிஷ் மந்திரி கடிதம்

லண்டன், ஆக. 31

சீனுவுக்கும் பிரிட்டனுக்குமிடையேயான உறவுகள் அடைந்துள்ள தற்போதைய மோசமான நிலை பற்றி பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. பிரவுண், சீன வெளியுறவு மந்திரி திரு. சென்யிக்கு விலாசமிடப்பட்ட குறிப்பொன்றில், பிரிட்டனின் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

சீனுவுடன் வழமையான தொடர்புகளை மீண்டும் நிலைநிறுத்தத் தன்னுலான முயற்சிகளை எடுக்க பிரிட்டன் தயாராகவிருப்பதாகவும் அவர் அக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

லண்டனிலுள்ள சீனத் தூதரகப் பொறுப்பதிகாரியை பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. பிரவுண், தனது குறிப்பை ஏற்பதற்காக அழைத்தபோதும், சீனப் பொறுப்பதிகாரி அதனை ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

கடந்த செவ்வாயன்று, லண்டனிலுள்ள சீனத் தூதரகத்துக்கு முன்னுல் தூதரகச் சிப்பந்திகளுக்கும் லண்டன் பொலிசாருக்குமிடையே மோதல் ஏற்பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

**பிரவுண் சந்திப்பு**

நேற்று பிரவுண், சீனத் தூதரகத்துக்கு முன்னுல் காவல் புரியும் பொலிசாரை நேரில் சென்று சந்தித்துப் பேசினுர். கடந்த செவ்வாயன்று சீனர்களால் எவ்வளவோ தூண்டப்பட்ட போதிலும், துணிவுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொண்டமைக்காக அவர் பொலிசாரைப் பாராட்டினுர். அச்சம்பவத்தில் காயமுற்ற பொலிசாருக்குத் திரு. பிரவுண் தமது அனுதாபத்தையும் தெரிவித்தார்.

இதற்கிடையில், பீகிங்கில் நேற்று புதிதாக பிரிட்டிஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஏமன் பிரச்னை மீது ஐ.அ.கு.—சவுதி அரேபியா சமரசம்

அரபு உச்சி மாநாட்டிலிருந்து ஒரு குறிப்பிடத்தக்க நன்மை ஏற்பட்டிருக்கிறது. ஏமன் பிரச்னைக்கு ஐ.அ.கு.வும், சவுதி அரேபியாவும் ஒரு சமரச முடிவைக் கண்டுள்ளதாக மாநாட்டின் தலைவரான சூடான் பிரதமர் திரு. மஹ்பூப் அறிவித்துள்ளார்.

சவுதி அரேபிய மன்னர் பெயிஸலாலும் ஐ.அ.கு. ஜனதிபதி நாஸரும் 2 மணித்தியாலங்களுக்கு மேல் ஏமன் பிரச்னை பற்றி விவாதித்தனர். கூட்டத்தை விட்டு இரு தலைவர்களும் வெளியே வருகையில், அவர்கள் சிரித்த முகத்துடன் காணப்பட்டனர்.

**சமரச நிபந்தனைகள்**

ஏமனிலுள்ள தனது துருப்புகளை வாபஸ் செய்வதென்று ஐ.அ.கு.வும், ஏமன் புரட்சிவாதிகளுக்கு உதவியளிப்பதில்லையென்று சவுதி அரேபியாவும் உறுதியளித்திருப்பதாகக் கூறப்பட்டது, ஐ.அ.கு. துருப்புகளுக்குப் பதிலாக ஈராக், மொரொக்கோ, சூடான் துருப்புகள் ஏமனில் நிறுவப்படலாமென ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

ஏமனிலுள்ள அரசாங்கம் ஐ. அ. கு. வுக்குச் சார்பானதாகும். அங்கு அரசாங்கத்தை எதிர்க்கும் புரட்சிவாதிகளுக்கு சவுதி அரேபியா உதவி அளித்து வந்துள்ளது. இப்போது ஐ. அ. கு. வும் சவுதி அரேபியாவும் ஒரு சமரசத்துக்கு வந்துள்ளதால், ஏமனில் 5 வருடங்களுக்கு மேலாக நடந்து வந்துள்ள உள்நாட்டுப் போருக்கு விரைவில் ஒரு முடிவு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கென்யாவில் சீனத்தூதரகத்தை மூடிவிட ஆலோசனை

நைரோபி, ஆக. 31

கென்யாவுக்கும் சீனுவுக்குமிடையேயான உறவுகள் மேலும் மோசமடையும் அறிகுறிகள் தென்பட்டுள்ளன.

கென்யாவிலுள்ள சீனத் தூதரகத்தை மூடிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கென்யா பொருளாதார மந்திரி திரு. [illegible] தெரிவித்த ஆலோசனைக்கு, கென்யாவின் [illegible] தேசிய ஐக்கியக் கட்சி ஆதரவு அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஹொங்கொங்கில் மீண்டும் கலவரம்

ஹொங்கொங், ஆக. 31

ஹொங்கொங்கில் சீன ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிசாருக்குமிடையே நேற்று மீண்டும் ஏற்பட்ட மோதலில் 7 ஆர்ப்பாட்டக்காரரும், 3 பொலிசாரும்

## அஸாமுக்கு சமஷ்டி இல்லை

புதுடில்லி, ஆக. 31

அஸாம் புனரமைப்பு பற்றிப் பரிசிலனை செய்ய நியமிக்கப்பட்ட அசோக் மேத்தா கமிஷன், தனது அறிக்கையைத் தயாரித்துள்ளது. அவ்வறிக்கையை கமிஷன் இன்று மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அஸாமுக்குப் பிரதேச சமஷ்டி அளிக்கும் யோசனையைக் கமிஷன் நிராகரித்துள்ளது. பதிலாக அதிக அதிகாரங்களை அந்த ராஜ்யத்துக்கு அளிக்கலாமென அக்கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

## இந்தோனேஷியா-மலேஷியா உறவுகள்

கோலாலம்பூர், ஆக. 31

இந்தோனேஷியாவும், மலேஷியாவும் முழு ராஜிய உறவுகளை வைத்துக்கொள்வதென முடிவு செய்துள்ளன.

நேற்று நள்ளிரவு இங்கு வெளியிடப்பட்ட ஓர் இணைப்பறிக்கையில் இம்முடிவு வெளியிடப்பட்டது.

சுகர்னேவின் மலேஷிய எதிர்ப்புக் கொள்கையைத் தொடர்ந்து சிறிது காலம் இரு நாடுகளுக்குமிடையேயான ராஜிய உறவுகள் முறிவடைந்திருந்தன என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

800 பேரடங்கிய கூட்டத்தின்மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிசு கொலைவழக்கு
### மறுவிசாரணைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், வெள்ளி கிளிநொச்சி சிசுக் கொலை வழக்கு மீண்டும் விசாரணை செய்யப்படவேண்டும்என்று நீதியரசர் தெரிவித்தார். ஜூரிசபையினர் நான்கு மூன்ருகத் பிரிந்து தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து நீதியரசர் மீண்டும் விசாரணைசெய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இவ்வழக்கில் கிளிநொச்சி 4-ம் வாய்க்காலில் 65-ம் ஆண்டு ஆகஸ்ட் 25-ம் திகதி 9 மாதக் குழந்தையான் வாசு விக்னேஸ்வரனை கொலைசெய்ததாக துரைசாமி பெண் இராசம்மா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் எஸ். தம்பித்துரை, அட்வகேட் நவரத்தினத்தின் உதவியுடனும், புறக்டர் ஏ. அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடனும் ஆஜராஞர். எதிரிக்காக அரசாங்கத்தில் புறக்டர் ஏ. சிவானந்தன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர்முன்னிலையில் கடந்த இரண்டு தினங்களாக விசாரணைசெய்யப்பட்டது. ஜூரி சபையினர் சுமார் ஒரு மணித்தியால நேர மந்திராலோசனையின் பின் தங்கள் தீர்ப்பைத் தெரிவித்தனர்.

## இளம் பெண் கடத்தப்பட்டார்?

காங்கேசன்துறை, வியா. ஏழு பிள்ளைகளுக்குத் தந்தையான ஒருவர்மீது சங்கானைப் பொலிஸார் வலை வீசியுள்ளனர். பதினேழு வயது இளம் யுவதியைக் கடத்திச் சென்றுவிட்டதாக இவர்மீது சந்தேகித்தே பொலிஸார் இவரைப் பிடிக்கும் வேட்டையில இறங்கியுள்ளனர்.

காரைநகரைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவரை இந்த நபர் கடத்திச் சென்றுவிட்டதாகப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

—

## காதைக் கடித்தார
### 2 வருடக் கடுழியம்

சென்னை, ஆக. 31 உறவினர்களுடன் ஏற்பட்ட தகராற்றில் காது கடிக்கப்பட்டுவிட்டதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் ஜேம்ஸ் என்ற 21 வயது இளைஞருக்குக் 2 வருடகடுழியச்சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

லுணுவை சம்பவம்:

—

## ஜே. பி. நியமிக்க கோரிக்கை

பண்டத்தரிப்பு, வியாழன் மாரீசன்கூடல், இளவாலை, சித்திரமேழி, விளான் மற்றும் அயல்கிராமமக்கள் இப்பகுதியில் சமாதான நீதவானுக ஒருவரை நியமிக்கும்படி கையெழுத்துகளடங்கிய மகஜரை அரசாங்க அதிபருக்கு அனுப்பவிருக்கின்றனர். திரு. எஸ். சூசைப்பிள்ளை என்பவரை நியமிக்கும்படி இவர்கள் கேட்டுள்ளனர்.

## "பெயர்களை வெளியிடுக"

காலி, வியா. அண்மையில் லுணுவை வாடி வீட்டில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர் விபரங்களை உடனடியாகவெளிவிவகார அமைச்சு வெளியிடவேண்டுமெனக்கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று காலி அரசினர் ஆஸ்பத்திரி ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு திரு. டி. டபிள்யூ. நாணயக்காரா தலைமை வகித்தார்.

இந்த விவகாரம் சம்பந்தமாக பலவிதமான வதந்திகள் பரவி வருவதாகவும் இச் சபையிலுள்ளவர்களின் பெயர்களும் பேசப்பட்டு வருவதால் இது சம்பந்த மானவர்களின் பெயர்களைப் பத்திரிகைகளும் வெளியிட வேண்டுமென்றும் திரு ஆனந்த குணசேகரா பேசுகையில்குறிப்பிட்டார். இக் கருத்தை காலி மாநகர சபை அங்கத்தவர் திரு. என்.வி.எப்.நாகரத்தினுவும் ஆதரித்துப் பேசினர்.

## பிரயாணிகள் சமமேளனம உதயம

யாழ்ப்பாணம், வியாழன் வடமாகாணத்தின், சுமார் 25 பிரயாணிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் கொண்ட வட இலங்கைப் பொதுப் போக்குவரத்துப் பிரயாணிகள் சம்மேளனம் ஒன்று கச்சேரி மண்டபத்தில் உதயமாகியுள்ளது. இச் சம்மேளனத்தின் தலைவராக திரு. கு. நேசையாவும் உப தலைவர்களாக; சி. எம் எஸ். சண்முகநாதன், எஸ். வைரமுத்துவும், காரியதரிசியாக திரு. தி. வேலுப்பிள்ளையும், உபகாரியதரிசியாக திரு. எஸ். பாலச்சந்திரஐயரும் பொருளாளராக திரு. எஸ். இரத்தினசபாபதியும், உப பொருளாளராக திரு. இ. கனகசபாபதியும் கணக்குப் பரிசோதகராக ஏ. பொன்னையாவும் தெரிவு செய்யப்பட்டனர். [வி. நி]


நீங்கள் கேளுங்கள்!

சிங்கம் மார்க்

LION BRAND SANDANADI THYLAM சிங்கமார்க்

சந்தனதித் தைலம்

வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்: போன் 2300&3200

ப.மு.ஈசன்ஸ்.

88, செட்டியார்தெரு, கொழும்பு, 11.

ஈழவள நாட்டிலே

எங்குமே கிடைக்கும்!!

யாழ்ப்பாண மாவட்ட ஏஜண்ட்:

என். எம். எஸ். அன்ட் பிரதர்ஸ்,

கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.



இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்க்துள்ளது.

பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினுல் இழக்கப்படுகின்றன

அரைவாசிக்கு மேற்பட்ட சிறுவர்களும் கிட்டத்தட்ட எல்லா இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனல் இவ ஈறு வியாதியினுலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அத்தோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில கவனியாது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினுல் துன்பப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனுல அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். அவர்களின் தயாரிப்பு முறைக்கு ஈறுகளை பாதுகாக்கவல்ல விசேட மருந்துகளை கலந்து தயாரிக்கப்பட்டது.

எந்தவொரு முறையிலும் பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களை சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும். ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் [illegible] இருக்கும். [illegible] இதனுல் உறுதியான ஆரோக்கிய முள்ள ஈறுகளின் உரமான வெண்ணிறப் பற்களை விரைவுக.

உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்க்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### நெடுந்தீவு கிராமசபை கேள்வி விளம்பரம்

**சன்னுக்குளம் றேட்டுவேலை**

மேற்படி வேலைக்குரிய கேள்விப் பத்திரங்கள் 13-9-67 பிற்பகல் நாலு மணிவரையும் நெடுந்தீவு கிராம சபைத் தலைவரால் வழங்கப்படும். 15-9-67 காலை 9 மணிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில்சமர்ப்பிக்கலாம். அதே நேரம் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி அதிபர் கந்தோரிலும்சமர்ப்பிக்க வேண்டும். கேள்விப் பணமாக ரூபா 10-00ம் பிணைப்பணமாக ரூ. 50-ம் கட்டி பத்திரங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். மற்றும் விபரங்கள் கந்தோர் நாட்களில் அறிந்து கொள்ளலாம்.

ம. கணபதிப்பிள்ளை,
கி. ச. தலைவர்,
216 நெடுந்தீவு.



## முருகமூர்த்தி கோவில் ஒழுங்கை

நாரந்தனை கிராமசபை அக்கிராசனரால் மேற்படி றேட்டு வேலைக்கு 1967-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9-ந் திகதி பி. ப. 2-30 மணிவரை பதிவு செய்த கொந்தராத்துக் காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 8-9-67-ந் திகதி பகல் 12-00 மணி வரை இக் காரியாலயத்தில் கொடுக்கப்படும். மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி அதிபர் கந்தோரிலும், நாரந்தனைக் கிராம சபைக் கந்தோரிலும் அறிந்துகொள்ளலாம்.

ச. அருமைநாதன்,
அக்கிராசனர்,
கி. ச., நாரந்தனை.

கிராமசபை அலுவலகம்,
நாரந்தனை,
ஊர்காவற்றுறை,
ஆவணி 29-1967.
215



வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# மாத்தளையை யாழ். 'கிறீன்பீல்ட்' வென்றது

## திருமலையில் நடந்த விறுவிறுப்பான உதைபந்தாட்டப் போட்டி

திருக்கோணமலை, வியா. திருக்கோணமலை சென். ஜோசப்கல்லூரியின் 100-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு அகில இலங்கை விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் 'கிறீன் பீல்ட்' கோஷ்டியும், 'யங் மாத்தளையன்ஸ்' கோஷ்டியும் திருக்கோணமலை ஸ்ரேடியத்தில் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி பத்து நிமிடங்களுள் 'கிறீன் பீல்ட்' இடதுமுன்னணிவீரர் ஏ. தேவராசா முதலாவது கோலைப் போட்டார்.

அதைத் தொடர்ந்து 'யங் மாத்தளையன்ஸ்' கோஷ்டிக்கு ஒரு "பெனல்டி" கிடைத்தது. இதை அக்கோஷ்டியின் காப்டன் ஜமீல் மிகசாதுரியமாக அடித்து கோலுக்குள் நுழைத்தார். இடைவேளையின் போது 'கிறீன்பீல்ட்' கோஷ்டி 4-1 கோல்களைப் பெற்றிருந்தது. இதில் 3 கோல்களை ஏ. தேவராசாவும், ஒருகோலை மத்திய முன்னணி வீரர் ஏ. பெனடிற்றும் போட்டனர்.

இடைவேளையின் பின் ஆரம்பமாகிய போட்டியில் இரு கோஷ்டியும் மிகவேகமாக விளையாடினர். இச் சந்தர்ப்பத்தில் 'யங்மாத்தளையன்ஸ்' கோஷ்டி இடது உள்முன்னணி வீரர் வஜ்ரவேல் ஒரு கோலைப் போட்டார். ஆட்டம் முடிவடைய 15 நிமிஷங்கள் இருக்கும் போது 'கிறீன்பீட்ல்' முன்னணிவீரர்களாகிய போல், பெனடிற் முறையேஒவ்வொருகோலைப் போட்டனர். இப் போட்டி முடிவடையும் போது 'கிறீன்பீல்ட்'கோஷ்டி 6-2 கோல்களால் யங்.மாத்தளையன்ஸ் கோஷ்டியை தோற்கடித்தது. இப்போட்டி 90 நிமிடங்கள் வரை நீடித்தது. இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணசாமி மத்தியஸ்தம் வகித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 1-9-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற் சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 பண்ணிந் தமிழ், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 தொழிலாளர்லேலை.

இரவு 6-15 பஜனை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 முத்தி நெறி — சைவசஞ்சிகை, 7-45 திருமுறைப்பயிற்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கதாப்பிரசங்கம் — ரி. பொன்னம்பலம், 10-15 தேர்ந்தஇசை.

## 'ஆரோக்கியநாதர்' விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செவ். குருநகர் ஆரோக்கியநாதர் சனசமூக நிலையத்தின் 2-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி டாக்டர் திரு. ஏ. எல். ஏபிரகாம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் காவடி கோஷ்டி, பாடை மரண ஊர்வலக் கோஷ்டி ஆகிய விநோத உடை ஊர்வலக் காட்சிகள் முக்கிய இடம் பெற்றன. உயரம் பாய்தல் போட்டியில் வீரர்களின் கரணப் பாச்சல், சர்க்கஸ் விளையாட்டுக்களைப்போல் பிரமாதமாக இருந்தது.

இவ்விளையாட்டு விழாவில் பரிசுகள் பெற்ற வீரர் வீராங்கனைகளின் பெயர்கள் பின்வருமாறு:-

25 மைல் சயிக்கிள் ஓட்டம்: கே. துரைசிங்கம், எஸ். ஜோசை, என். சிங்கம்.

10 மைல் சயிக்கிள் ஓட்டம்: பிறுெபின், ஜே. தாசசியஸ், என். அமலதாசன். கீழ்ப்பிரிவு: என். சிறில், ஏ. குணசிங்கம், கே. பெனடிற். 7 மைல் ஓட்டம் மேற்பிரிவு: ஈ. பெரேடா, கே. ஜோஜப், ஜே. அருமை.

பொது ஓட்டம்: என். இராசசிங்கம்.

விநோத உடைப்போட்டி: காவடிக் கோஷ்டி, மரக்கறிக்காரி, மரண ஊர்வலம், பிச்சைக்காரன், குஷ்டரோகி.

3 மைல் நீச்சல் போட்டி: என். சிறில், பி. அழகு, என். குணம், எஸ். பாக்கியராசா, செல்லச்சிங்கம்.

தேங்காய் துருவுதல் மேற்பிரிவு பெண்கள்: கே. நேசமலர், ஆர். திரேசம்மா, டி. சந்திரா.

கரகாட்டம்: ஜே. இம்மானுவல், பிலிப்நெறி, பூபாலசிங்கம்.

மேற்பிரிவு உயரம் பாய்தல்: நாகராசா, செல்லச்சிங்கம், பிறேடா.

தடி ஊன்றிப் பாய்தல் மேற்பிரிவு: ஈ. எட்வேட், குணநாயகம், தர்மசீலன்.

50யார் பெண்கள் ஓட்டம்; வேஜினி, நொய்லா, மங்கையர்க்கரசி.

பெண்கள் தடை ஓட்டம்: ரீ. வனிதா, ஜே. குணவதி, மரியகரெட்ரி.

டாக்டர் திரு. ஏ. எல். ஏபிரகாம் வெற்றிபெற்றோருக்கு பரிசில்களை வழங்கினார். கதம்ப நிகழ்ச்சிகளும் நாடகமும் நடைபெற்றன.

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

வயது முதிர்ந்த மூன்று தறித்த பலாமரங்களும், ஐந்நூறுமுழ ஓட்டுச்சிலாகைகளும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ந. தில்லையம்பலம், ஒடை, ஏழாலைமேற்கு, சுன்னுகம். 2332

காணி:

வீடு கட்டுவதற்குகந்த காணி யாழ்ப்பாணம் ஸ்ரேஷனுக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு 47, கொலிஜ் றேட், வண்ணார் பண்ணை. 2327

தமிழ் இலக்கிய வினுவிடை

1967 டிசம்பரிலும் அதன் பின்னரும் நிகழ விருக்கும் கல்விப்பொதுத் தாராதரப் பத்திர [சாதாரண] வகுப்பு மாணவர்கள் தேர்ச்சிக்கான நூல்விலை 2 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2325


### வருடாந்தக்கூட்டம்

வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாஜ வருடாந்தப் பொதுக்கூட்டம் சமாஜ தலைவர் திரு. க. கெங்காதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. காலியான அங்கத்துவ ஸ்தானங்களுக்குப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். திரு.சி. க. திருச்சிற்றம்பலம், சங்கானை, திரு. எஸ். நரசிங்கம், தொல்புரம், திரு. எஸ். தம்பையா, பணிப்புலம், திரு. கே. கெங்காதரம்பிள்ளை, சித்தங்கேணி, திரு. எஸ். சண்முகதாஸ். கட்டுடை.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி
கே. ஆர். விஜயா
நடித்த
செல்வம்

REGAL JAFFNA
Time: 4-30 7-00 p. m.
9-45 p. m.
Robert Taylor
in
RETURN OF THE GUN FIGHTER
(Color)

இன்று முதல்
கெபிடல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜிதா [ஹட்டன்] மொடர்ன் [பதுளை] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
விஜயா [மட்டுநகர்]
புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!
ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ், விஜயலட்சுமி, ரத்னு, மாதவி
நடித்த



நாம் மூவர்
டைரக்ஷன்: ஜம்பு
பாடல்கள்: வாலி
இசை: என்.எம்.எஸ்.
2-வது மாதம்
கிங்ஸ்லி [கொழும்பு] வெம்பிளி [கண்டி]
மற்றும் 4 திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
அன்பே வா

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 930
பரயாதினங்களில் 4காட்சிகள்
ஏ. வி. எம், ராஜன்
கே. ஆர். விஜயா
நடித்த
மனம் ஒரு குரங்கு

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
பி.ப. 4-45, 7-00, 9-45.
Horst Bucholz
Sylva Koscina
in
THAT MAN IN ISTANBUL
(Secret Agent Film)

கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கு
ஓர் நற்செய்தி
எங்களிடம் குறைந்த செலவில் சிறந்த முறையில் கட்டிடமேல் கூரை இரும்பு வேலைகள், இரும்பு கேட், கிரில்கள், பைப்பிட்டிங், வாட்டர்டேங் [நீர்த்தாங்கி] வெல்டிங், வார்ப்பு வேலைகள், கூரைசீட், ஆணி முதலியவைகள் உடனுக்குடன் குறிப்பிட்ட தவணைக்குள் செய்து கொடுக்கப்படும்.



ஒருமுறை நேரில் எங்களிடம் தொடர்பு கொண்டு உங்களின் ஆதரவை நல்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.
மகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
அன் சிலோன இன்டஸ்றியல் இன்ஜினியரிங் வேக்ஸ்
150, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடீஸ்வரன் வழக்கு அப்பீலில் அட்டர்ணி ஜெனரல் வெற்றி

## தீர்ப்பை எதிர்த்து பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்வர்?

கொழும்பு, புதன்

கோடீஸ்வரன் வழக்கில் மாவட்ட நீதிபதி அளித்த தீர்ப்பை எதிர்த்து அட்டோர்ணி ஜெனரல் தாக்கல் செய்த அப்பீலை விசாரணை செய்த அப்பீல் நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொண்டு மாவட்ட நீதிபதியின் தீர்ப்பை தள்ளி வைத்துள்ளது.

அப்பீல் நீதிமன்றத்தின் இத் தீர்ப்பை எதிர்த்து கோடீஸ்வரன் சார்பில் பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்யத் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக அறியப் படுகிறது.

இந்த வழக்கின் அப்பீல் செலவு தொகையை கோடீஸ்வரன் செலுத்த வேண்டுமென்றும் பிரதம நீதியரசர் தலைமையிலமைந்த அப்பீல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பில் அரசாங்க ஊழியனுக்கும் அரசாங்கத்துக்கு மிடையில் நடைமுறைப்படுத்தக் கூடிய எந்தவித ஒப்பந்தமும் இல்லை என்ற அடிப்படையில் இத் தத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்ணண்டோவும் நீதியரசர் திரு. ஜி. பி. ஏ. சில்வாவும் இந்த விசாரணையை நடத்தினார்கள்.

5-12-60 இல் திறைசேரியினால் வழங்கப்பட்ட திறைசேரிச் சுற்றறிக்கை இல' 566 சிங்களச் சோதனையில் சித்தியடையாவிட்டால் ஆண்டுச் சம்பள உயர்வு கொடுப்பதைத் தடுக்கும் அதிகாரத்தை வழங்கியது தவறானது என்பதை எதிர்த்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் திரு. செல்லையா கோடீஸ்வரன் இந்த வழக்கைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்கள். மாவட்ட நீதிமன்ற விசாரணையின் பின்னர் தீர்ப்பளித்த மாவட்ட நீதிபதி திரு. ஓ. எல். டி. கிறெட்சர் "ஆங்கிலத்தில் வேலை செய்வதே இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம்" என்றுகூறி, திரு. கோடீஸ்வரனுக்குக் கொடுபடவேண்டிய ஆண்டுச் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது தவறு என்று தீர்ப்பளித்தார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து அட்டோர்ணி ஜெனரல் உயர்நீதிமன்றத்துக்கு முறையீடு செய்திருந்தார். உயர்நீதிமன்ற விவாதம் பத்துநாட்களுக்கு மேல் நீடித்தது.

அரசாங்கதரப்பில் சொலிசிட்டர் ஜெனரல் திரு. வோல்டர் ஜயவர்தன கியூ. சி. திருவாளர்கள் தெகரகொட, எச். எல். த. சில்வா ஆகியோர் திரு. சுலைமானின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க சார்பில் திரு. செ. ரெங்கநாதன் கியூ. சி., திருவாளர்கள் எஸ். சர்வானந்தா, எஸ். சி. குரெருசெட் தம்பையா, மணிவாசகம் அண்டலூட், சேனு விஜயவர்தன, நடராசா காசிராஜா, கே. தேவராஜா, சிவ நாகராசா, எம். சிவராசசிங்கம் ஆகியோர் திரு. லூசியன் பெரேராவின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

உயர் நீதிமன்றத்தீர்ப்பை எதிர்த்து பிரிவுக்கவுன்சிலுக்கு அப்பீல்செய்வதற்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தீர்மானித்திருப்பதாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துடன்நெருங்கியவட்டாரங்கள் தெரிவித்தன.

---

மண்டைதீவு கொலை வழக்கு

## 3ம் 4ம் எதிரிகள் விடுதலை

### 1ம் 2ம் எதிரிகளுக்கு சுப்ரீம்கோர்ட் விசாரணை

யாழ்ப்பாணம், வியா.

மண்டைதீவுக் கொலை வழக்கில், 3-ம், 4-ம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். 1-ம், 2-ம் எதிரிகளை சுப்பிறீம்கோட்டு விசாரணைக்கு நிற்குமாறு யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு. ஜாமீல் நேற்று உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜனவரி 20-ந்தேதி மண்டைதீவில் சாம்பசிவமூர்த்தியை கொலை செய்ததாக, குலசிங்கநாதன், சிவபாதசுந்தரம், பாலசிங்கம், தருமு ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ஏ அன்ரனியின் அனுசரணையுடன் ஆஜரானர். 3-ம் எதிரி சார்பில் அட்வகேட் வி. என். நவரத்தினம், அட்வகேட் எம். எஸ். சுந்தரலிங்கத்தின் உதவியுடன் வி. கதிரவேலுவின் அனுசரணையுடனும் ஆஜரானர். 4-ம் எதிரிசார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர்.

---

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல் நிறுவனம் அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## சமபவம நட...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சாட்: மாஜிஸ்டிரேட்டிடம் குறிப்பிட்டேன்.

வழ: அதை நான் கேட்கவில்லை. பொலிசில் குறிப்பிட்டீரா?

சாட்: இல்லை.

வழ: சார்ஜண்ட் அருளானந்தம் விசாரணை செய்தாரா?

சாட்: ஆம்.

வழ: அவர் ஒரு தமிழ் பொலிஸ்?

சாட்: ஆம்.

வழ: தமிழில்தானே விசாரணை செய்தார்?

சாட்: ஆம்.

வழ: நீர் கைவெட்டப்பட்டதைப்பற்றி பொலிசில் சொல்லாத காரணம் சம்பவம் நடந்த இடத்தில் நீர் நிற்கவில்லை.?

சாட்: நின்றேன்.

விசாரணையைப் பார்க்க பெண்கள் உட்பட அநேகம் பேர் நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் நின்றார்கள். விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

---

## "பொதுமக்களே அமைக்க வேண்டும"

கொழும்பு, வியாழன்

"இன்று நாம் ஒரு விஞ்ஞான யுகத்தில் வாழ்கின்றோம். வருங்கால மக்கள் விஞ்ஞானத்தையே நம்பி வாழவேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது. விஞ்ஞானமே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலப் பொருளாதாரத்தைச் சிருட்டிக்கும் பெரும் பொறுப்பு வருங்கால இளைஞர்களின் கையிலேயே இருக்கிறது. எனவே இவ்விளைஞர்களுக்கு விஞ்ஞானக் கல்வி ஊட்டப்பட வேண்டியது மிக அவசியம். இக்கால மாணவர்களுக்கு உயர்தர விஞ்ஞானக் கல்வியைப் புகட்டுவதற்கு முதல் தரக் கல்லூரிகளில் சிறந்த விஞ்ஞான ஆய்வு கூடங்கள் அமைக்கப்படல்வேண்டும்" என காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஆ. தியாகராசா வெள்ளவத்தைசைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற காரைநகர் இந்துக் கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூட கட்டட நிதி ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

காரைநகரிலிருக்கும் ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு உயர்தர விஞ்ஞானக் கல்வி புகட்டுவதற்கு காரைநகர் இந்துக் கல்லூரியிலி ஒரு விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட வேண்டியது மிக அவசியமெனவும், அதற்கு அரசாங்கத்தின் உதவியை எதிர்பாராது, பொதுமக்கள் தங்கள்பணத்தால் இதை அமைத்துக் கொள்ள முன்வர வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

விஞ்ஞான ஆய்வு கூடகட்டட நிதி திரட்டுவதற்கென கொழும்பில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

---

## திருச்சியில் சிக்கிம் தம்பதிகள்

திருச்சி, ஆக. 31

தற்போது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள சிக்கிம் அரச தம்பதிகள், நேற்று சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு வந்துசேர்ந்தனர்.

அவர்கள் நேற்றுத்திருச்சி நகரைச்சுற்றிப்பார்த்தனர். புகழ்பெற்றகுகைக்கோவிலையும் அவர்கள் தரிசித்தனர். அத்துடன், காவேரி ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள அணையையும் அவர்கள் பார்வையிட்டனர்.

---

### உற்சவம்

தொல்புரம், வியாழன்

தொல்புரம் மடத்துப்பிள்ளையார் கொடியேற்றத் திருவிழா நடந்ததினமின்று ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறும்.

---

# வடவியட்னும் மீது குண்டுவீச்சை நிறுத்தல்

## அமெரிக்கா ஆலோசிக்கும்

வாஷிங்டன், ஆக. 31

வடவியட்னும் மீதான குண்டு வீச்சை நிறுத்துவது பற்றிப் பரிசீலனை செய்வதற்கு அமெரிக்க அரசாங்கம் சம்மதித்துள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வட வியட்னும் மீதான விமானத்தாக்குதலை நிறுத்தும் எந்தத்திட்டத்தையும் முதலில் தென் வியட்னும் அரசாங்கத்துடன் கலந்தாலோசித்தே ஒரு முடிவுக்கு வரமுடியுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

குண்டு வீச்சை நிறுத்துவதால் வட வியட்னுமுக்கு மட்டுமே நன்மை பயக்கக் கூடியதாகஅதுஅமைந்துவிடலாமோ என்ற விடயம் பற்றியும் ஆலோசிக்க வேண்டியுள்ளதாக அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ளது.

---

## உற்பத்தியான

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சாங்கத்துக்கு செய்த பல புகார்களைத் தொடர்ந்து மீண்டும் இம்மாதம் 4-ந்திகதி தொடக்கம் தினசரி 20 பெட்டி வெங்காயம் ஏற்றுமதி செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

கடந்த வருடம் இருபோகமும் மூன்று லட்சத்து முப்பத்திஒன்பதுஆயிரம்அந்தர் வெங்காயம் வடபகுதியிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. ஆனால் இவ்வருடம் கடந்த ஆகஸ்ட் மாதம் வரை 271 ஆயிரத்து 195 அந்தர் வெங்காயமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த வருட ஏற்றுமதியிலும் பார்க்க சுமார் 2 லட்சம் அந்தர் குறைவானதாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

உத்தரவாத விலைத் திட்டத்துக்கு அமைய யாழ். மாவட்ட விவசாயிகள் உற்பத்தி செய்யும் வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதில் தொடர்ந்து இப்படியான கஷ்டங்கள் ஏற்படுமானல் இங்கு அடுத்த வருடத்தில் விவசாயிகள் வெங்காய உற்பத்தியில் ஈடுபட முடியாத நிலை உருவாகலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. [ந. நி.]

## நாட்டிலும் நகரிலும

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பது சிந்திக்கவேண்டியது.

ஆபிரிக்க நாடுகள் பல சுதந்திரமடைந்து முன்னேறி அபிவிருத்தியடைகின்றன. அவற்றிலும் தேயிலை, ரப்பர், தெங்குப் பொருட்கள் உற்பத்தியாகின்றன. ஆகையால் இனிமேல் அங்கிருந்தும்போட்டி எழக் கூடும்.

காலம் போகிறபோக்கை அறிந்து அதற்கேற்றாற் போல நாம் நமது பொருளாதாரத்தைக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

— வழிப்போக்கன்

## இவர்கள் நிலை

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசாங்சிங்கள தேர்வுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு தேர்வுப்பகுதியினரால், கடந்த 4ந்திகதிபே' பெறுபேறுகள் அனுப்பப்பட்டபோதிலும் யாழ். இந்துமகளிர் கல்லூரிக்கு இதுவரை பெறுபேறுகள் கிடைக்கவில்லையாம். இதனல் மேற்படி கல்லூரியில் முதலாந்தரப் பரீட்சைக்குத் தோற்றிய இரு ஊழியர்கள் அதன் பெறுபேறு தெரியாமல் மறு தேர்வுக்கு விண்ணப்பிக்க முடியாதிருப்பதாகத் தெரிகிறது.

---

## நேரில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எதிரே எதிரி நின்றபடியால் சொல்ல முடியவில்லை என கீழ்கோர்ட்டில் கூறினீரா?- ஞாபகமில்லை.

நீதி: ஒரு கையில் கத்தி வைத்திருந்தார்?- ஆம்.

வழ: மற்றக் கையால் இரண்டு கால்களையும்இழுத்துக் கொண்டு போனார்?- இரண்டு காலையும் இழுத்தார்.

வழ: எனது கேள்விக்கு அது மறுமொழியல்ல. இரண்டு காலில் பிடித்து இழுத்துக் கொண்டு போனதால், வெட்டப்பட்ட கையும் நிலத்தில் இழுபட்டுக் கொண்டு போயிருக்கும்?- வெட்டிய கையை நெஞ்சில் வைத்திருந்தார்.

வழ: மற்றக்கையுமில்லை, வெட்டின கையை அணைத்துக்கொண்டிருந்தது?- ஆம்.

வழ: இந்தமறுமொழியை இப்படி சொல்லும்படி யாரும் சொல்லித்தந்தார்களா?- இல்லை.

வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ரி. நல்லையா, அரசாங்க இரசாயன பரிசோதகர் எஸ். குமாரசாமி ஆகியோர் சாட்சியமளித்தனர். விசாரணை இன்று காலை 9-15 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகும்.

---

## சனசமூக நிலைய சமாஜ விழா

கோப்பாய், திங்கள்

"உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து சனசமூக நிலையங்களின் நிர்வாகம் உள்நாட்டமைச்சுக்கு மாற்றப்பட்டதால் இன்று நமது மாவட்டத்தில் சனசமூக நிலைய இயக்கம் குற்றுயிரான நிலைக்கு வந்துள்ளது. இந்நிலை மாறவேண்டுமாயின் சனசமூக நிலையங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை மீண்டும் உள்ளூராட்சி அமைச்சு ஏற்க வேண்டும்" என நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற வலி-கிழக்கு சனசமூக நிலைய சமாஜக் கலை நிகழ்ச்சிகளில் உரையாற்றிய யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமாஜ செயலாளர் திரு. த. துரைசிங்கம் கூறினர். திருமதி வேதவல்லி கந்தையா தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

வலி-கிழக்கு சனசமூக நிலையங்களிடையே நடைபெற்ற கலை நிகழ்ச்சிப் போட்டிகளில் நீர்வேலி ஸ்ரீசுப்பிரமணிய மாதர் சனசமூக நிலையம் முதலாம் இடத்தையும், நீர்வேலி ஸ்ரீசுப்பிரமணிய சனசமூக நிலையம் இரண்டாவது இடத்தையும், ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையம் மூன்ருவது இடத்தையும் பெற்றன.

---

## தரமுயர்த்த முடிவு

சுன்னுகம், வியாழன்

சுன்னுகம் பட்டின சபை சீரிய முறையில் வரி வசூலித்து வருவதால் அதனை ஐந்தாம் தரத்திலிருந்து நாலாந்தரமாக உயர்த்த முடிவு செய்துள்ளார்கள். சுன்னுகம் ஆயுள்வேத இலவச வைத்திய சாலையை பட்டின சபைக்கட்டிடத்திற்கு மாற்றுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org